ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ அன்றாயர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அன்றாயர் ॥

## திருநீர்மலை

‡அன்றாயர் குலக் கொடியோடு⋆ அணி மா
மலர் மங்கையொடன்பளாவி⋆ அவுணர்க்-
கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு⋆
உறையும் இடம் ஆவது⋆ இரும் பொழில் சூழ்
நன்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தை⋆ தடம் திகழ் கோவல்நகர்⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (1)

காண்டாவனம் என்பதோர் காடு⋆ அமரர்க்-
கரையன் அது கண்டவன் நிற்க⋆ முனே
மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும்
அதுவன்றியும்⋆ முன் உலகம் பொறை தீர்-
த்தாண்டான்⋆ அவுணன் அவன் மார்பகலம்⋆
உகிரால் வகிர் ஆக முனிந்தரியாய்
நீண்டான்⋆ குறள் ஆகி நிமிர்ந்தவனுக்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (2)

அல மன்னும் அடல் சுரி சங்கம் எடுத்து⋆
அடல் ஆழியினால் அணி ஆருருவின்⋆
புல மன்னு வடம்புனை கொங்கையினாள்⋆
பொறைதீர முனாள் அடுவாள் அமரில்⋆
பல மன்னர் படச் சுடர் ஆழியினைப்⋆
பகலோன் மறையப் பணி கொண்டு அணி சேர்⋆
நில மன்னனும் ஆய் உலகாண்டவனுக்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (3)

தாங்காததோர் ஆள் அரியாய்⋆ அவுணன்
தனை வீட முனிந்தவனால் அமரும்⋆
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்-
ததுவன்றியும்⋆ வென்றி கொள் வாள் அமரில்⋆
பாங்காக முன் ஐவரொடன்பளவிப்⋆
பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர் பட⋆
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (4)

மாலும் கடல் ஆர மலைக் குவடிட்டு⋆
அணை கட்டி வரம்புருவ⋆ மதி சேர்
கோலமதிள் ஆய இலங்கை கெடப்⋆
படை தொட்டொரு கால் அமரில் அதிர⋆
காலம் இதுவென்றயன் வாளியினால்⋆
கதிர் நீள் முடி பத்தும் அறுத்தமரும்⋆
நீலமுகில் வண்ணர் எமக்கிறைவற்க்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (5)

பார் ஆர் உலகும் பனி மால் வரையும்⋆
கடலும் சுடரும் இவை உண்டும்⋆ எனக்-
காராதென நின்றவன் எம் பெருமான்⋆
அலை நீர் உலகுக்கரசாகிய⋆ அப்-
பேரானை முனிந்த முனிக்கரையன்⋆
பிறர் இல்லை நுனக்கெனும் எல்லையினான்⋆
நீர் ஆர் பேரான் நெடுமால் அவனுக்-
கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (6)

புகர் ஆருருவாகி முனிந்தவனைப்⋆
புகழ் வீட முனிந்துயிருண்டு⋆ அசுரன்
நகர் ஆயின பாழ் பட நாமம் எறிந்-
ததுவன்றியும்⋆ வென்றி கொள் வாள் அவுணன்⋆
பகராதவன் ஆயிர நாமம்⋆ அடிப்
பணியாதவனைப் பணியால் அமரில்⋆

நிகர் ஆயவன் நெஞ்சிடந்தான் அவனுக்-
    கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (7)

பிச்சச் சிறு பீலி பிடித்து⋆ உலகில்
    பிணம் தின் மடவார் அவர் போல்⋆ அங்ஙனே
அச்சம் இலர் நாண் இலர் ஆதன்மையால்⋆
    அவர் செய்கை வெறுத்தணி மா மலர்தூய்⋆
நச்சி நமனார் அடையாமை⋆ நமக்-
    கருள் செய் என உள் குழைந்தார்வமொடு
நிச்சம் நினைவார்க்கருள் செய்யும் அவற்-
    கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (8)

பேசும் அளவன்றிது வம்மின்⋆ நமர்
    பிறர் கேட்பதன் முன் பணிவார் வினைகள்⋆
நாசம் அது செய்திடும் ஆதன்மையால்⋆
    அதுவே நமதுய்விடம் நாள் மலர்மேல்⋆
வாசம் அணி வண்டறை பைம் புறவில்⋆
    மனம் ஐந்தொடு நைந்துழல்வார்⋆ மதி இல்
நீசர் அவர் சென்றடையாதவனுக்-
    கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (9)

‡நெடு மால் அவன் மேவிய நீர் மலைமேல்⋆
    நிலவும் புகழ் மங்கையர் கோன்⋆ அமரில்
கட மா களி யானை வல்லான்⋆ கலியன்
    ஒலி செய் தமிழ் மாலை வல்லார்க்கு⋆ உடனே
விடு மால் வினை⋆ வேண்டிடில் மேல் உலகும்
    எளிதாயிடும் அன்றி இலங்கொலி சேர்⋆
கொடு மா கடல் வையகம் ஆண்டு⋆ மதிக்-
    குடை மன்னவராய் அடி கூடுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥